

# ஐக்கிய |ஜெபம்

## அனைத்து சபைகளுக்கும் அழைப்பு

செப்டம்பர் 16, 2014

# தேசிய அளவில் அழைப்பு 24-7 ஜெபம்

## மலேசியாவிற்கு ஆசீர்வாதம் வேண்டி அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு தேசிய அளவில் உடைபடாத ஜெபத்தை இயக்குதல்

**2 நாளாகமம் 7:14**

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்.

**24-7 ஜெபத்திற்குரிய நேரம் இது .** தேசத்திற்காக விடுபடாத ஜெபத்தில் ஈடுபட மலேசிய சபைகளுக்கு நேரம் வந்துள்ளது. சபை இந்த மார்க்கத்தில்தான் செல்லவேண்டும் என்று போதுமான அளவிற்கு உறுதியாகி உள்ளது. அதாவது 24-7 ஜெபத்திற்கு நம்மை நாம் ஒப்புக்கொடுக்கும் நேரம் வந்துவிட்டது.

**2 வருடத்திற்கு பொருத்தனை.** அசம்பாவிதங்கள், சவால்கள், சமூகவியலில் மோசமான சரிவு, மற்றும் சபைகளுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்கள்; தேசத்திற்கு எதிராக எழும் இவற்றிற்கு எதிராகவும் மறு சீரமைப்பிற்கெனவும் 2 வருட ஜெப அரண் ஒன்று ஏற்படுத்துவது அவசியமாகிறது.

**ஆசீர்வதிக்கப்படவும் ஆசீர்வாதமாயிருக்கவும் .** பாடுகளும் சவால்களும் நிறைந்திருக்கிறபோதும், தேவ ஜனங்களின் ஜெபங்கள் மூலமாக தேசத்திற்கு ஆசீர்வாதங்களை கொண்டு வரும் முகவர்களாக சமாதானம், ஒப்புரவாக்குதல், மேலும் நமது அயலகத்தாரை அன்பின் வழி சந்திக்க தேவன் அவர்களைப் பயன்படுத்துவார் என்பதில் உறுதியாய் இருக்கிறோம்.

**செப்டம்பர் 16, 2014 துவக்கம் - மலேசிய தினம் .** **இந்த 2 வருட பொருத்தனை செப்டம்பர் 16, 2014ல் மலேசிய தினத்தில் அதிகாரப்பூர்வமாக புக்கிட் ஜாலில் கல்வாரி கன்வென்ஷன் மையத்தில் மலேசிய ஜெப கொண்டாட்ட நாளில் காலை 10.00 மணிக்குத் துவங்கும்.**

**அனைத்து சபைகளும் ஜெப பணிவலைகளும் தங்கள் சபையார்களையும் ஜெபக்குழுவினரையும் சங்கிலி ஜெபத்தொடரில், முறையாக, அதிகார தேதிக்கு முன்னரே இணைத்து இயக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.**

# ஐக்கிய|ஜெபம்

ஏன் 24-7 ஜெபத்திற்கு அழைப்பு?

ஐக்கிய ஜெபத்தின் செயற்குழு உறுப்பினர்கள் ஒருசேர இணைந்து மலேசியா தேசம் ஜெப மழையில் நனைய வேண்டிய நேரம் இதுதான் எனும் தீர்மானத்திற்கு வந்தனர். இன்னும் சொல்லப்போனால் இந்த உணர்த்துதல் சில காலமாகவே பல்வேறு மாநாடுகளிலும் கூட்டங்களிலும் காணப்பட்டு வந்தது.

தேவன் தமது ஜனங்களை இடைவிடாத ஜெபங்களில் நெருக்கடி சமயங்களில் பயன்படுத்தி வந்துள்ளார் என சரித்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக தென் ஆப்பிரிக்காவின் அப்பாதெயிட் சட்டம், மொரேவியன் சமூகத்தினரின் 100 ஆண்டுகால 24/7 ஜெபத்தின் ஊடுருவல், இதின் விளைவாக சிந்தனை முன்னோடிகள் மூலமாய் 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ப்ரோட்டஸ்டண்ட் இயக்கம் போன்றவை. மலேசிய திருச்சபைகளும் இவ்விதமாகவே கடைபிடிக்க வேண்டும். திடீர் விண்ணப்ப ஜெபங்களைத் தவிர்த்து தேசிய அளவில் 24-7 ஜெப அழைப்பில் பங்கு பெற்று திருச்சபைகள் மறுபடியும் பரிசுத்த ஜீவியத்திற்கும் ஒற்றுமைக்கும் திரும்பி மென்மேலும் பாதகங்கள் ஏற்படாலும், தேவ ஆசீர்வாதத்திற்கும் ஷேமத்திற்கும் வேண்டி ஆவிக்குரிய நெறியான சமூகவியல் தேசத்தில் தோன்றும்படிக்கு மன்றாட வேண்டும்.

## கிறிஸ்தவர்களை ஒன்று சேர்த்தல்

தேசமனைத்தையும் ஜெப உறையில் முத்திரையிடும் ஜெப ஒன்றுகூடலில் இணைக்கும் ஐக்கிய ஜெபத்தில் அழைப்பில் பங்கெடுக்க வேண்டுமனெ உற்சாகப்படுத்தப்படுகின்றனர். உங்கள் சபையிலேயோ, சிறு குழுக்களிலோ நீங்கள் ஜெபிக்கலாம். உங்கள் ஸ்தல மற்றும் வட்டார சபைகளோடு இணைந்து இதனைச் செய்வீர்களானால் இன்னும் சிறப்பாக இருக்கும். உங்கள் இருதயத்தில் தேவன் வைக்கிற பாரத்தின்படியே செய்யுங்கள். இதன் நோக்கமானது நாம் அனைவரும் இந்த 24-7 ஜெபத்தில் முறிவு ஏற்படாமல் ஜெபிக்க வேண்டுமென்பதே.

## ஜெப சாதனங்கள்

ஏற்ற ஜெப சாதனங்களையும் ஜெபக் குறிப்புக்களையும் ஒருங்கே தருவதில் ஐக்கிய ஜெபக்குழுவினர் கடப்பாடு கொண்டுள்ளனர். பொது ஜெப வழிகாட்டியாக மலேசியாவிற்கு ஜெபியுங்கள் எனும் குறிப்பை பயன்படுத்துவோம். இதனைத்தொடர்ந்து இரு மாதத்திற்கு ஒரு முறை ஜெபக் குறிப்புகள் உங்கள் இணைப்பு பணிவலையின் வழி விநியோகம் தொடரும்.

## ஐக்கிய ஜெபத்தின் புரவல ஸ்தாபனங்கள், பிரிவுகள் மற்றும் பணிவலைகள்

1. மலேசிய திருச்சபைகள் மன்றம்
2. என்.இ.சி.எப்
3. தேவ சங்க சபைகளின் ஜெப ஆணையம்
4. எஸ்.ஐ.பி. சபா
5. எஸ்.ஐ.பி. சரவாக்
6. தீபகற்ப எஸ்.ஐ.பி.
7. மலேசிய மெதடிஸ்ட் திருச்சபை
8. கோத்தா கினபாலு போதகர் ஐக்கியம்
9. கூச்சிங் ஊழியர்கள் ஐக்கியம்
10. 24-7 மலேசிய ஜெபம்
11. மலேசிய தேசிய ஜெப வளர்ப்புகள்




## உதவி தேவையா?

மேலும் தகவல்கள் மற்றும் சாதனங்கள் மற்றும் இறுதிகட்ட நடவடிக்கைகளுக்கு தயவு செய்து உங்கள் ஐக்கிய ஜெபத்தின் புரவல ஸ்தாபனங்கள், பிரிவுகள் மற்றும் பணிவலைகளைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் அனைத்து சந்தேகங்களுக்கு prayerunited.my@gmail.com எனும் பொது வலைப்பதிவு முகவரிக்கு அனுப்புங்கள்.